# வாக்குமூலம்
# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்
# வழக்கு எண்: CC – 12 /2021

**வழக்கு சாட்சி :PW2(LW2)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அம்பிகாவதி | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | குமரேசன் | தொழில் | : | கூலிவேலை |
| கிராமம் | : | கீழத்தெரு | சமயம் | : | |
| தாலுக்கா | | இலுப்பூர் | வயது | : | 29 |

(எதிரி ஆஜர் இல்லை .எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on the day 15th day of October 2024.

சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார் – (சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).

**முதல் விசாரணை**

நான் தற்போது கீழத்தெருவில் குடியிருந்து வந்து கூலிவேலை செய்து வருகிறேன். கடந்த 02.06.2020 ம் தேதி மாலை 04.00 மணிக்கு நானும், எனது அண்ணன் ஆசைத்தம்பி என்பவரும் புதுக்கோட்டை to பொன்னமராவதி செல்லும் சாலையில் பெருமாநாடு பேருந்து நிறுத்தற்திற்குஅருகே நின்று கொண்டிருந்தோம் . அப்போது புதுக்கோட்டையிலுருந்து , குடுமியான்மலை நோக்கி TN 55 AJ 6979 என்ற பதிவெண் கொண்ட Boliro கார் ஒன்று அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் வந்து கொண்டிருந்தது. அப்போது யோகிதா என்னும் சிறுமி அவரது பாட்டில் வீட்டில் இருந்து அத்தை வீட்டிற்கு செல்வதற்காக சாலையை கடந்து மறுபுறம் சென்று சாலை் ஓரம் நின்று கொண்டிருந்த போது அதிவேகமாக வந்த TN 55 AJ 6979 என்ற பதிவெண் கொண்ட Boliro கார் சிறுமியின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியது. சிறுமிக்கு தலையின் நெற்றியின் முன்பகுதியில் காயம ஏற்பட்டது,. நானும், எனது அண்ணன் ஆசைத்தம்பியும் சிறுமியை சிகிச்க்கைகாக புதுக்கோட்டை அரசு மருத்துவ கல்லூாரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் சிறுமியை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் இறந்துவிட்டதாக கூறினார்கள். காரை ஓட்டிய ஓட்டுநரை எனக்கு நன்கு அடையாளம் தெயியும். அவரை பார்த்தால் அடையாளம் காட்டுவேன். அவர் பெயர் புகழேந்தி ஆகும் . இது சம்மந்தமாக சிறுமியின் அத்தை பரமேஷ் வரி புகார் அளித்தார் போலிசார் என்னை விசாரித்தனர் .

**<u>எ.த.கு.வி</u>**

போதிய அவகாசம் அளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை. வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை.